# கொழும்புத்துறைப் பிரதேசப் பாடசாலை மாணவர்களின் கற்றல் நாட்டம் பற்றிய பிரச்சினைகள்

**வா. ரவிராஜன்[1†], மா. சின்னத்தம்பி[2]**

[1]சுண்டிக்குழி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம், இலங்கை
[2]கல்வியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
[†]mrs.v.ravirajan@gmail.com

**சுருக்கம்:** இன்று பொதுவாகவே தமிழ்ப்பிரதேசங்களில் கல்வித்தராதரங்கள் வீழ்ச்சி அடைந்து வருவதாக் கல்விப்புலம் சார்ந்தோர் கருத்துப்பரப்புகை செய்கின்றனர். எமது சமூகம் எதிர்கொண்ட போரியல் வாழ்வும், போருக்குப் பின்னரான வாழ்வும் கல்வித்துறையில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தி உள்ளன. இதற்கான காரண காரியங்கள், பின்புலங்கள் பற்றிய ஆய்வுகள் வெளிப்படவேண்டியதன் அவசியத்தைப் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். இதன் அடிப்படையிலேயே இங்கு மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வும் மாணவர்களது கல்வித்தராதரங்களது வீழ்ச்சி, வளர்ச்சி என்ற பொதுவான நேர்க்கோட்டுத் தன்மையில் புரிந்து கொள்ளாது அதனது சிக்கல் தன்மையை பல்நோக்கு நிலை நின்று புரிந்து கொள்ள முயன்றிருக்கின்றது. இன்று அதிக தாக்கத்தைக் கல்விச் சூழலில் ஏற்படுத்தி வரும் கற்றல் நாட்டம் குறித்த பிரச்சினைகளை இனங்காணலையே இந்த ஆய்வு மைய நோக்காகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணச் சூழலில் கல்விச் சரிவு பற்றி மேற்கிளம்பிய கருத்து சார்ந்து வெளிப்பட்ட சில பார்வைகள் அரசியல், சமூக, பொருளாதாரத் தாக்கங்களுக்கு மிக எளிதாக உட்படும் கரையோரப் பிரதேசங்களில் நிலவும் கல்விச் சூழலை மையப்படுத்தின. இதன் அடிப்படையிலேயே இந்த ஆய்வும் யாழ்ப்பாணத்தின் கரையோரப்பகுதியில் ஒன்றான கொழும்புத்துறைப் பிரதேசத்தை ஆய்வுக் களமாகத் தெரிவு செய்து கொண்டது. இப் பிரதேசத்திலுள்ள முறைசார் பாடசாலைகளில் கல்வி பயிலும் இடைநிலை வகுப்பு மாணவர்களது கற்றல் நாட்டம் பற்றிய பிரச்சினைகளை அம் மாணவர்களது மனோபாவம், கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டில் அவர்களது ஈடுபாடு, சமூக உணர்வு உள்ளிட்ட வேறு பின்புலங்கள் சார்ந்து புரிந்து கொள்ளும் நோக்குடனேயே இந்த ஆய்வு பயணித்துள்ளது. அளவை நிலை ஆய்வைப் பிரயோகித்து ஆய்வின் பிரதான தரவு சேகரிக்கும் கருவிகளான வினாக்கொத்து, நேர்காணல், அவதானம் மூலம் குறித்த பாடசாலைகளில் கல்வி கற்கும் இடைநிலை வகுப்பு மாணவர்களையும் அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களையும் மாதிரிகளாகக்கொண்டு திரட்டிய முதல்நிலைத் தரவுகளையும் பாடசாலைப் பதிவேடுகள், கிராம சேவகர் குறிப்புக்கள், முறைசார் செயற்றிட்டக் குறிப்புக்கள், பாடசாலை வரவுக்குறிப்பேடு, மாணவர் கணிப்பீட்டு-மதிப்பீட்டுப் பதிவுகள் போன்ற துணைநிலைத் தரவுகளையும் இணைத்து புள்ளிவிபரவியல் நுட்ப முறை கொண்டு பகுப்பாய்ந்து பார்த்தபோது முனைப்புப் பெற்று நின்ற பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றினடியாக முடிவுகளும் முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. முடிவுகள் தரும் விளக்கத்தைத் நோக்கும்போது ஆய்வுப் பரப்பில் உட்படுத்தப்பட்ட மாணவர்கள் கட்டாயத்தின் பேரிலோ கடமையெனக் கருதியோ பாடசாலைக்கு ஒழுங்காகச் சமூகம் தருவதையும், பரீட்சைகளுக்கு தோற்றுவதையும் அறியலாம்.

பாடசாலைக் கற்றலில் ஆர்வமோ, ஈடுபாடோ இன்றியோ அவர்கள் செயற்படுகின்றனர் என்பதனை அவர்கள் வகுப்பறையில் கற்கும்போதும் பாடசாலைக்கு வீட்டுப்பாட வேலைகள் செய்யாதும், கற்றல் உபகரணம், புத்தகம் இன்றியும் வருதல் சுட்டிநிற்கின்றது. இவை தவிர, இவர்கள் பரீட்சை குறித்தோ அல்லது பரீட்சை அடைவுகள் குறித்தோ அதிக அக்கறை கொள்ளாமையும் இவர்களிடம் கற்றல் நாட்டத்தின் குறைபாட்டைச் சுட்டிக்காட்டுகிறது. இக்கற்றல் நாட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை நோக்கின்: குடும்ப வருமானம், தொழில் பெறும் வாய்ப்புக்கள், சகபாடி உறவுகள், இதர சமய நிகழ்வுகள், கல்விப் பயன் பற்றி அறியப்படாமை, கல்வியை முதன்மைப்படுத்தாத பெற்றோரது மனப்பாங்கு போன்ற பல பிரச்சினைகளை இனங்காண முடிகின்றது. இங்கு இனங்காணப்பட்ட பிரச்சினைகள் நீண்ட காலமாக இச் சமூகத்தில் புரையோடிப்போயுள்ளன. இவற்றைத் தீர்ப்பதற்கு நடைமுறைச் சாத்தியப்பாடான பிரயோகத் தன்மையுள்ள முன்மொழிவுகளே பயன்தரும். சமூக நல நிறுவனங்கள், சமூக சேவையாளர்கள் போன்றோரது கரிசனையும் அர்ப்பணிப்பும், ஈடுபாடும் மனப்பாங்குகளில் மாற்றமுமே இந்நிலை குறித்த மேன்மையை அடையச் செய்யும். குறுகிய காலத் தேடலாக அமைந்த இந்த ஆய்வு இனங்காட்டிய குறிகாட்டிகள் குறித்து இனி வரும் ஆய்வுகள் கவனம் செலுத்துவது அவசியமாகின்றது. குறித்த கரையோரப் பகுதியில் இனங்காணப்பட்ட பிரச்சினைகள் எல்லாப் பகுதிக்குமானவையா என்ற பொதுமையாக்கல் சிந்தனையும் தேடலும் இங்கு அவசியமாக உணரப்படுகின்றது.